குழந்தைகள் பத்திரிகை

13-4-1975

50 காசு

கோகுலம்



தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



கோகுலம்

மலர் 4 □ இதழ் 1

ஏப்ரல் 13, 1975

ஆனந்த, பங்குனி 30


சந்தா விவரம்:

உள்நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 27-50




உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்



இது மலேயாவின் வரை படம். அம்புக்குறியிட்டுள்ள இடங்களில் உள்ள நகரங்கள் என்ன?

இது என்ன [illegible] என்று சொல்ல முடியுமா?






கடலையே வெறித்துப் பார்த்தபடி கழுத்து வரை புதையுண்டுள்ள இந்தத் தலைச் சிலைகள் எங்குள்ளன என்று சொல்ல முடியுமா?

விடைகள் 14ம் பக்கம் பார்க்க.



புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான இவர் பிறந்தது 1828ல். மறைந்தது 1910ல். மகாத்மா காந்தியினால் மிகவும் விரும்பப்பட்ட இவரைத் தெரிகிறதோ?



இது ஒரு பிரமிட். ஆனால் இது எகிப்து நாட்டில் இல்லை. இது எங்குள்ளது. இதன் பெயர் என்ன தெரியுமா?

அறநெறி

திருமுருக கிருபானந்த வாரியார் சு.ஜ.

'கெடுவான் கேடு நினைப்பான்'

சங்கிலியாபுரத்தில் ராமன் வாழ்ந்து வந்தான். இவன் தெய்வ பக்தி உடையவன். அவன் மனைவி இரப்பார்க்குக் கரவாமல் தருவாள். ஏழைகளைத் தாய் போல் ஆதரித்துப் பசியாற்றுவாள். இறைவன் கருணை ராமனுக்குத் துணை செய்தது. அவனுடைய தொழில் வளம் பெற்றது. ராமன் பட்டும் சரிகை ஆடையும் உடுத்துக் கோயிலுக்குப் போவான். அவன் மனைவி அணிகலன்கள் அணிந்து மகாலட்சுமிபோல் இருந்தாள்.

ராமனுடைய எதிர் வீட்டில் சாமன் இருந்தான். சாமனுடைய உள்ளத்தில் பொறாமைத் தீ பொங்கியது. உள்ளம் வெம்பினான். ராமனுடைய செல்வ நிலையைக் கண்டு பெருமூச்சுவிட்டான். 'ராமன் ஏழையாகிப் பிச்சை எடுக்க மாட்டானா? அவன் வீட்டில் சாவு வராதா?' என்று எண்ணுவான்.

சாமன் இவ்வாறு எண்ணி உள்ளம் உலைந்தான். ராமனை அழிக்க என்ன வழி என்று ஆராய்ந்தான்.

ஒரு மலை அடிவாரத்தில் குள்ளன் என்று ஒரு கள்ளன் வாழ்ந்தான். அவன் பரம துஷ்டன். சாமன் அவனிடம் போய்த் தான் அருமையாகத் தேடி வைத்திருந்த ஆயிரம் ரூபாய் நோட்டுக் களைக் கொடுத்தான். பணத்தைக் கண்ட கள்ளன் திகைத்தான்; மகிழ்ந்தான்.

சாமன், ''குள்ளா, என் எதிர் வீடு ராமன் வீடு. நீ வருகின்ற அமாவாசை அன்று இரவு அவன் வீட்டுத் தெருக் கதவையும் தோட்டத்துக் கதவையும் வெளியில் பூட்டி மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்திவிடு. அப்படிச் செய்வதற்குத்தான் இந்த ஆயிரம் ரூபாய் பரிசு'' என்றான். பணம் என்றால் யாருக்குத்தான் ஆசை இருக்காது? கள்ளன் பணத்தை எடுத்துப் பெட்டியில் வைத்தான்.


''ஐயா! வீட்டிலே தீ வைப்பது சுலபம். ஆனால் எனக்கு ராமன் வீடு தெரியாதே'' என்றான்.

''என் வீட்டுக்கு எதிர் வீடுதான் அவனுடைய வீடு.''

''அட! உன் வீடும் தெரியாதே!''

''எங்கள் ஊரில் பிள்ளையார் கோயில் இருக்கின்ற அந்தத் தெருவில் 35ம் நெம்பர் வீடு ராமன் வீடு.''

''அட! எனக்குப் படிப்புத் தெரியாது. பகலில் வந்தால் என்னைக் காவல்



துறையினர் சிறை செய்வார்கள். நான் ஒரு காகிதத் தாமரை தருகின்றேன். அதனை அமாவாசையன்று இரவு பத்து மணிக்கு ராமன் வீட்டு ஓட்டில் செருகி வை. அந்த அடையாளத்தை வைத்து அவன் வீட்டைக் கொளுத்தி விடு வேன்!'' என்று கூறி ஒரு காகிதத் தாமரைப் பூவைத் தந்தான் கள்ளன்.

சாமன் அந்தக் காகிதத் தாமரைப் பூவைக் கொணர்ந்து தன் வீட்டு மாடத் தில் வைத்தான். அவன் மனைவி, ''இது ஏது ? எதற்கு?'' என்றாள்.

சாமன், ''பெண்ணே ! இது மந் திரப் பூ. இது நம் வீட்டில் இருந்தால் நம் வீடு கிடுகிடு என்று செல்வச்செழிப்பு அடையும்'' என்று உண்மையை மறைத் துச் சொன்னான்.

அன்று அமாவாசை. சாமன் மாலை போய்க் கள்ளனிடம் இரு பூட்டுக்களை யும் மண்ணெண்ணெய் டின்னும் தந்து எச்சரிக்கை செய்துவிட்டு வந்தான்.

இரவு பத்து மணி. ராமன் கோயி லுக்குப் போய் வந்து தெய்வத்தைத் தொழுது, படுத்து உறங்கினான்.


சாமன் இரவு பத்து, பத்தரை மணிக்குக் காகிதப் பூவை ராமன் வீட்டு ஓட்டில் செருகிவிட்டு வந்தான். தன் மனத்துக்குள், ''அடே, ராமா ! பணக் காரப் பயலே ! தீயில் குடும்பத்துடன் வெந்து நீ சாம்பலாகப் போ'' என்று கூறிக் கொண்டு படுத்து உறங்கினான்.


இரவு பன்னிரண்டு மணிக்குச் சாமன் மனைவி தூக்கம் பிடிக்காமல் காற்று வாங்கத் தெருவுக்கு வந்தாள். ராமன் வீட்டின் ஓட்டில் காகிதப் பூவைப் பார்த் துத் திடுக்கிட்டாள்.

''ஆ! நம்ம வீட்டில் இருந்த மந் திரத் தாமரைப் பூ இவங்க வீட்டுக்கு எப்படிப் போயிற்று?'' என்று எண்ணி அதனை எடுத்துத் தன் வீட்டு ஓட்டில் செருகி, ''என் மந்திரப் பூவே! நீ என் வீட்டில் இரு'' என்று கூறி அப்பூவைக் கும்பிட்டுவிட்டு உள்ளே போய்ப் படுத் தவள் நன்றாகத் தூங்கியும் போனாள்.

இரவு ஒரு மணிக்கு இரு பூட்டுக் களுடனும் மண்ணெண்ணெய் டின்னுட னும் முகமூடி அணிந்து கள்ளன் வந் தான். தாமரைப் பூ எந்த வீட்டில் இருக்கிறது என்று பார்த்தான். அவ னுக்கு எது சாமன் வீடு, எது ராமன் வீடு என்று தெரியாது. தாமரைப் பூ இருக்கின்ற சாமன் வீட்டை முன்னும் பின்னும் வெளியில் பூட்டி மண்ணெண் ணெய் ஊற்றித் தீ வைத்தான். கெட்ட எண்ணம் உள்ள சாமன் குடும்பத்தோடு சாம்பல் ஆனான்.

கெடுவான் கேடு நினைப்பான்.







கட்டில் தோன்றிய கதை

— வாண்டு

வெகு காலத்துக்கு முன்னாலே ராஜாவும் அவர் மனைவியான ராணியும் வாழ்ந்து வந்தார்கள். இவ்விருவரும் ரொம்பவும் மகிழ்ச்சியான தம்பதிகள், அவர்களுக்குத் தேவையானதெல்லாம் இருந்தன. ஒரு சமயம் ராணியின் பிறந்த நாள் வந்தது. பிறந்த நாள் பரிசாக ராணிக்கு என்ன தருவது? அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. தேவை என்று எதுவுமே இல்லாதவர்களுக்கு எதைத் தரமுடியும்? அரசர் யோசித்தார், யோசித்தார், யோசித்....! சட்டென்று அவருக்கு ஒரு யோசனை பளீரிட்டது.




ராணிக்கு ஒரு கட்டிலைப் செய்து பரிசளித்தால் என்ன?

ராணிக்கு அதுவரை கட்டில் கிடையாது. ஏனென்றால் அவர்கள் காலத்தில் கட்டில் கண்டு பிடிக்கப்படவில்லை.

மன்னர் மதி மந்திரியைக் கூப்பிட்டார். ஒரு கட்டில் தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டார். மதி மந்திரி அரண்மனைப் பிரதம தச்சனாரை வர வழைத்தார். ஒரு கட்டில் தயார் செய்து தரும்படி கூறினார். பிரதம தச்சனார் தன் கீழ் வேலை கற்றுக் கொள்ளும் சிஷ்யப் பையனிடம் அந்தப் பணியை ஒப்படைத்தார்.

'கட்டில் என்பது எப்படி இருக்கும்? எத்தனை பெரியதாக இருக்கும்?' என்று கேட்டான் சீடனான








தச்சுப் பையன். ஏனென்றால் அந்தக் காலத்தில் யாருமே கட்டிலைப் பார்த்ததில்லை!

கட்டில் என்பது எவ்வளவு பெரியதாக இருக்குமென்று ஆஸ்தானப் பிரதம தச்சனார் பிரதம மந்திரியைக் கேட்டார். 'சரியான கேள்விதான்' என்று தனக்குள் கூறிக்கொண்ட மதி மந்திரி உடனே ஓடிப்போய் ராஜாவிடம் அதே கேள்வியைக் கேட்டார்.

''கட்டில் எவ்வளவு பெரிதாக இருக்கும்?''

அரசர் யோசித்தார், யோசித்தார், யோசித்.....!









சட்டென்று தெளிவு பிறந்தது அரசருக்கு. **''கட்டில் என்பது ராணி அதில் படுத்துக்கொள்ளும் அளவுக்குப் பெரிதாக இருக்க வேண்டும்.''**

ராஜா உடனே ராணியை அழைத்தார். பட்டுப் பட்டாடை அணிமணிகளை அணிந்து கொண்டு ராணியைத் தரையில் படுத்துக் கொள்ளும்படி கூறினார். பிறகு அரசர் தன்னுடைய பாதரட்சைகளைக் கழற்றினார். தனது பெரிய பாதங்களால் ராணியைச் சுற்றி நடந்தார் — இல்லை, அளந்தார்!

''மூன்று பாத அகலம், ஆறு பாத நீளம் உள்ள கட்டில் ராணி படுத்துக் கொள்ளப் போதுமானது'' என்ற முடிவுக்கு வந்தார்.

மன்னர் இதை மதி மந்திரியிடம் கூற, மந்திரி அரண்மனைப் பிரதம தச்சரிடம் கூற,







தச்சர் தம் சிஷ்யனிடம் கூறினார். தச்சரின் சிஷ்யன் தன்னுடைய சின்னக் காலினால் அளந்து மூன்று பாத அகலத்துக்கும் ஆறு பாத நீளத்துக்கும் ஒரு கட்டிலைத் தயாரித்தான்.

அரசர் கட்டிலைப் பார்த்து ஆனந்தப்பட்டார். அரசிக்கு பிறந்த நாள் வரும் வரை கூட அவரால் காத்திருக்க முடியவில்லை. உடனே கூப்பிட்டார் ராணியை. கட்டிலில் படுத்துப் பார்க்கும்படி கூறினார். அந்தக் கட்டில் ராணிக்குப் போதவே இல்லை! ராஜாவுக்குக் கோபமான கோபம். உடனே மதி மந்திரியைக் கூப்பிட்டார். மந்திரி தச்சனாரை அழைத்தார். தச்சனார் சீடனை அழைத்தார். மதிமந்திரி காவலாளியைக் கூப்பிட்டார். சீடப்பிள்ளை சிறைக்குள் தள்ளப்பட்டான்!

தச்சனாரின் சீடனுக்குத் துக்கமான துக்கம் — **ராணிக்குச் செய்த கட்டில் சின்னதாகப் போவானேன்?** யோசித்தான், யோசித்தான், யோசித்...!

திடீரென்று அவன் கால்களே அவனுக்கு அதன் ரகசியத்தைக்கூறிவிட்டன!

கட்டில் என்பது மூன்று அரச பாதங்களின் அகலமும் ஆறு அரச பாதங்களின் நீளமும் கொண்டது. சிஷ்யப் பையனான என் மூன்று பாத அகலமும் ஆறு பாத நீளமும் கொண்ட கட்டில் சின்னதாகத்தானே இருக்கும்? "**அரசிக்கு ஏற்ற கட்டிலை இப்போது என்னால் செய்ய முடியும். அதற்கான அளவுகள் இப்போது எனக்குத் தெரியும்**" என்று கத்தினான், பிரதம தச்சரின் சீடப் பையன். இதை உடனே சிறையதிகாரியிடம் விளக்கினான். அவர் பிரதம தச்சரிடம் கூற, அவர் மதி மந்திரியிடம் விவரிக்க, மந்திரி மன்னரிடம் சொல்ல, மன்னருக்கோ தம் கால் அளவைத் தருவதற்குச் சிறைச்சாலைக்குப் போக நேரமில்லை. ஆகவே ஆஸ்தான சிற்பியைக் கூப்பிட்டார். தம் ஒரு கால் பாதரட்சையைக் கழற்றினார். பாதுகை இல்லாத பாதத்தை முதலில் செய்திருந்த குட்டைக் கட்டிலின் மீது வைத்துக் கொண்டு அளவு காட்டினார். சிற்பி சலவைக் கல்லிலே அரசரின் பாதத்தைப் போலவே அதே அளவில் ஒரு பாதத்தைச் செதுக்கித்தர, அதைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தார்.

அந்தச் சலவைக் கல் காலை அளவாகக் கொண்டு ஆறு அரச பாத நீளமும் மூன்று அரச பாத அகலமும் கொண்ட கட்டிலைத் தயாரிக்கலானான் சீடன். அது அரசியின் பிறந்த நாளன்றைக்குச் சரியாக முடிந்தது. மகாராஜா மகாராணியைக் கூப்பிட்டார். புத்தாடை அணிந்து கொண்டு புதிய கட்டிலில் படுத்துக் கொள்ளச் சொன்னார்.


கட்டில் அரசியின் உயரத்துக்குக் கனகச்சிதமாக இருந்தது.

சும்மாச் சொல்லக் கூடாது. இது வரை அரசிக்கு அதுபோன்ற அழகான பரிசை யாருமே கொடுத்ததில்லை.

மன்னருக்கு மகா மகா மகா மகிழ்ச்சி! சிஷ்யனான தச்சனார்ப் பையனைச் சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரச் செய்தார். அவனை இளவரசனாக்கினார். ஏனென்றால் மன்னருக்கும் மகாராணிக்கும் குழந்தைகளே இல்லை!


கத்துக்குட்டி—தச்சனார் இளவரசனைப் பாராட்ட வரலாறு காணாத வகையில் விழா எடுக்கப்பட்டு மாபெரும் ஊர்வலமும் விடப்பட்டது நகரத்திலே.

அதன் பிறகு 'என் கட்டில் ஆறு அடி நீளமும் மூன்றடி அகலமும் உடையது' என்று யார் கூறினாலும் அது எவ்வளவு பெரியது என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. அன்றிலிருந்து யாராவது எதையாவது அளக்க வேண்டுமென்றால் அரச பாதத்தையே அளவாகக் கொண்டார்கள்.



செயல் புரிவோமே!

கி. பாலதண்டபாணி



''நல்லதை நினைத்தல்; நாளும்
நாட்டுக்கே உழைத்தல்; மக்கள்
அல்லலைத் தீர்த்தல்'' — இந்த
அறங்களைக் கடமை என்போம்.

கல்வியைக் கற்போம்; என்றும்
கற்றதன் வழியே சென்று
செல்வமும் சேர்ப்போம்; பிறர்க்குச்
சிறப்புடன் உதவி செய்வோம்.

அலைகள் சூழ் 'குமரி' தன்னை
அன்னையின் கால்கள் என்றால்
மலையடர் காச்மீ ரந்தான்
மங்கலம் துலங்கும் நெற்றி

இடையினில் வாழும் மக்கள்
இயம்பிடும் மொழிக ளோடு
நடையுடை பாவனை யாவும்
நமதெனும் சொந்தம் கொள்வோம்

'பாரதம்' என்னும் இந்தப்
பழம்பெரும் தேசங் காக்க
வீரரும் ஆவோம்: வினைகள்
வேரொடு சாய வெல்வோம்

எம்மதம் எனினும் இங்கு
எவருமே மாந்தர் என்னும்
சம்மதம் கொண்டே உண்மைச்
சாத்திரம் ஓங்கச் செய்வோம்

இவையெலாம் இந்நன் னாளில்
ஏற்றிடும் சபதம் ஆக்கி
அவையெலாம் நனவே யாக
அடுத்தினிச் செயல் புரிவோமே !



மருத்துவம் பிறந்த கதை

'கௌசிகன்'

1. கெட்ட ஆவிகளை விரட்டுதல்

தலைவலி என்றால் உடனே ஒரு மாத்திரையை விழுங்குகிறோம். பென்சில் சீவும் போது பிளேடு கையைப் பதம் பார்த்தால் உடனே டிங்க்சர் அல்லது களிம்பைத் தடவிக் கொள்ளுகிறோம். ஜுரம் என்றால் டாக்டரிடம் ஓடுகிறோம். அவர் கொடுக்கும் மருந்தைச் சாப்பிட்டுக் குணமடைகிறோம்.

இப்படி நமக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கு மருந்து சாப்பிட்டுக் குணப்படுத்திக் கொள்ள இன்று நமக்குத் தெரிகிறது. நோய்களுக்கு ஏற்ற மருந்துகளைக் கூற இன்று டாக்டர்கள் இருக்கிறார்கள். இன்ன நோய்க்கு இன்ன சிகிச்சை என்பதும் அவர்களுக்குத் தெரியும். இது அவர்களுக்கு எப்படித் தெரிகிறது? மருத்துவக் கலையைப் பயின்று தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள் அவர்கள். மனித சமூகத்தைத் தாக்கும் வியாதிகளைப் பற்றியும் அவற்றிலிருந்து அவனைக் காப்பாற்றும் வழி வகைகளைப் பற்றியும் கூறுவதுதான் மருத்துவக் கலை. இன்றைய மருத்துவக் கலை திடீரென்று ஒரே சமயத்தில் தோன்றிவிடவில்லை. பல நூற்றாண்டுகளில் படிப்படியாகப் பலவேறு ஆராய்ச்சியாளர்களின் உழைப்பினால் உருவானது இன்றைய நவீன மருத்துவக் கலை.

மருத்துவக் கலை தோன்றுமுன் ஆதி மனிதனுக்கு நோய்கள் வந்ததில்லையா? அவன் அதிலிருந்து எப்படித் தன்னைக் காத்துக் கொண்டான்? ஆதி மனிதன் நோயோடு போராடியதே ஒரு சுவையான வரலாறு.

இன்று நம் நாட்டில் மேலை நாட்டு மருத்துவம் ஆதிக்கம் செலுத்தினாலும் மருத்துவக் கலையில் நாம் எல்லோருக்கும் முன்னோடிகள். **ஆயுர்வேதம்** என்ற முறையினால் குணப்படுத்த முடியாத நோய்களே கிடையாது. **தன்வந்திரி** என்ற மருத்துவத் துறை மேதையைப் பற்றி நம் புராணங்கள் கூறுகின்றன. பச்சிலை மூலிகைகளைக் கொண்டு பல்வேறு வகையான மருந்துகளைத் தயாரிக்கத் தெரிந்திருந்தனர் பாரத மக்கள். ரண சிகிச்சைகளைக்கூட வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள் நம் மூதாதையர். இராமாயணத்தில் ஹனுமன் சஞ்சீவி மலையையே கொண்டு வந்து இறந்தவர்களையும் பிழைக்க வைத்ததைப் பார்க்கிறோம்.

நம் தொன்மையான கலாசாரத்தையும் நாகரிகத்தையும் ஆராய்ந்தறியாத மேலை நாட்டினர் இந்திய மருத்துவ முறையில் மந்திரங்கள்தாம் முக்கிய இடம் பெற்றிருந்தன என்று தவறாக எழுதுகிறார்கள். மந்திரங்களோடு மூலிகைகளின் குணம் தெரிந்த வைத்தியக் கலையும் நம்முடையது என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதை ஏனோ ஏற்றுக் கொள்ளுவதில்லை. எதற்கும் சீனாவையே தொன்மையான நாகரீகத்தில் மேம்பட்ட தேசம் என்று கூறும் மேலை நாட்டினர் மருத்துவக் கலையிலும் சீனர்களே - கி. மு. 3000ம் ஆண்டிலேயே - மேம்பட்டு விளங்கியதாகச்

தலைவலிக்கு உயிருள்ள நாயைக் கொண்டு சிகிச்சை.



கூறுகிறார்கள். பலவித மருந்துகளையும் அதன் பலன்களையும் சீனர்கள் கண்டிருக்கலாம். ஆனால் அதே சமயத்தில் பாரத மக்களும் மருத்துவக் கலையில் பின்தங்கி இருக்கவில்லை என்பதுதான் உண்மை. சீனர்களின் அக்கூபங்க்சர் என்ற சிகிச்சை முறையை அதிசயமாக மேலைநாட்டினர் பாராட்டும்போது, பாரதத்திலும் அதைவிட அற்புதமான பல சிகிச்சை முறைகள் நடைமுறையில் இருந்திருக்கின்றன என்பதை ஏற்க மனமில்லை அவர்களுக்கு. நம் நாட்டு மருத்துவக் கலையின் தொன்மையையும் மேன்மையையும் பற்றி விளக்குவதற்கான கட்டுரையல்ல இது. மேலை நாட்டு மருத்துவக் கலையின் வளர்ச்சி பற்றிய வரலாறுதான் இது.


மண்டையோட்டில் துவாரமிடும் கற்கால மனிதன்.

மேற்கத்திய நாகரீகத்தின் ஆதி கர்த்தாக்களாகப் பாபிலோனியர்களைக் கூறுவார்கள். மெடிசின் (*Medicine*) என்று வழங்கும் ஆங்கில வார்த்தை மெடிகார் (*Medicor*) என்ற லத்தீன் மொழியிலிருந்து தோன்றியது. அதன் பொருள் 'நான் குணப்படுத்துகிறேன்' (*I heal*) என்பது. இன்றைய நாகரிகத்தின் முன்னோடிகளாக விளங்கிய இவர்களிடம் மூட நம்பிக்கைகளுக்குப் பஞ்சம் கிடையாது. புராதன பாபிலோனியன் பல் வலி, ஒரு புழுவினால் ஏற்படுகிறது என்பதை அறிந்திருந்தான். இந்தப் புழு பற்களில் வாழ்ந்து ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துப் பற்களின் வேரைக் கடித்துத் துருவுவதாக நம்பினார்கள். இந்த அரக்கப் புழுவை விரட்டப் பூசாரியை அழைத்தார்கள். அவர் யா (*Ea*) என்ற கடவுளை நோக்கி மந்திரங்களை உச்சாடனம் செய்வாராம். வியாதிகளுக்கான காரணங்களுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கைகள் எத்தனை எத்தனையோ ஆதி மனிதனிடம் இருந்து வந்திருக்கின்றன.

கற்கால மனிதன் கீல்வாதம் (ருமாடிஸம்) எலும்புருக்கி (டி.பி.) ஆகிய நோய்களால் அவதிப்பட்டிருக்கிறான் என்பதைப் புதையுண்ட பழங்கால மனிதனின் எலும்புகளைத் தோண்டி ஆராயும்போது தெரிய வருகிறது. வியாதிகள் கெட்ட ஆவிகளால் ஏற்படுகின்றன என்று நம்பி வந்தான் ஆதி மனிதன். இத்தகைய ஆவிகளை உடலிலிருந்து விரட்டி விட்டால் அவன் குணமடைவான் என்றும் நம்பினார்கள். இதற்காக நோய்வாய்ப் பட்டவனின் மண்டை யோட்டிலிருந்து கெட்ட ஆவியை வெளியேற்றத் தலையில் துவாரமிட்டு சிகிச்சை செய்திருக்கிறான் கற்கால மனிதன். சரித்திர காலத்துக்கு முற்பட்ட மனிதனின் தோண்டி எடுக்கப்பட்ட மண்டை யோட்டில் இப்படித் துவாரங்கள் காணப்படுகின்றன. இப்படித் துவாரமிட்டு ரண சிகிச்சை செய்யப்பட்ட பின்பும் அவர்களில் சிலர் பல காலம் ஆரோக்கியமாக வாழ்ந்திருக்கிறார்கள். கற்காலத்தில் இப்படியொரு சிகிச்சை செய்தவன் எத்தனை திறமைசாலியாக இருந்திருக்க வேண்டும்!

நோய் தவிர ஆதி மனிதனுக்கு விலங்குகள் மற்றும் விரோதிகளாலும் ஆபத்திருந்தது. வேட்டையாடும்போதோ போராடும்போதோ ஏற்படும் காயங்கள் ஆறுவதற்கான வழி வகைகளை அறிந்திருந்தான் அவன். இன்றைய டாக்டர்கள் 'அநாடமி' பயின்றவர்கள். அதாவது மனித உடலின் உள் அமைப்பு பற்றிய ரகசியம் அறிந்தவர்கள். ஆதி மனிதனுக்கு இந்த அநாடமி எப்படித் தெரியும்? உணவுக்காக மிருகங்களை வெட்டி அறுக்கும்போது, மனிதர்களின் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போதும் உடலின் உள் உறுப்புக்களின் தன்மை அவனுக்கு ஓரளவு தெரிய வந்தது. துன்பத்தின் காரணம் (வலி) எதுவானாலும் அதற்கான சிகிச்சை மந்திரங்களும் நம்பிக்கைகளுமாகவே இருந்தன ஆதி மனிதனுக்கு.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்கள் ஊர் (*Ur*) என்ற நகரத்தில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இவை பூசாரி வைத்தியர்களால் பயன்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். இவர்களின் சிகிச்சை முறை மருந்துகளோடு மந்திரங்களும் (*Magic*) கலந்ததாக இருந்தது.

சிலவேளைகளில் மருத்துவப் பூசாரி கெட்ட ஆவிகளைக் கவர்ந்து அதை

வெளியேற்றுவதற்காக உயிருள்ள பிராணிகளைப் பயன்படுத்தினார். உதாரணமாக ஒரு நோயாளிக்குத் தாங்க முடியாத தலைவலி என்றால் பூசாரி ஒரு நாயை அந்த நோயாளியின் தலையில் வைத்து அழுத்திப் பிடித்துக் கொள்ளுவார். மனித நோயாளியின் தலைக்குள்ளே சம்மட்டி கொண்டு அடிக்கும் ஆவி அரக்கன் அவனை விட்டு, நாயின் தலைக்குள் புகுந்து கொள்ளும் என்பது பூசாரியின் விளக்கம்.

மத்திய கிழக்கில் சுமேரியாவிலும் பிற்காலத்தில் பாபிலோனியாவிலும் ஏராளமான வைத்தியர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் பயன்படுத்திய கத்திகளும் முத்திரைகளும் சட்ட திட்டங்களும் கிடைத்திருக்கின்றன. வெற்றிகரமான அறுவைச் சிகிச்சை புரிந்த வைத்தியர்களுக்கு அளிக்கப்படவேண்டிய ஊதியம் கூட அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதேமாதிரி அறுவைச் சிகிச்சை தோல்வியில் முடியுமானால் வைத்தியர் தம் கரங்களை இழந்த பரிதாபக் கதையையும் அக் குறிப்புக்கள் கூறுகின்றன.

பாபிலோனியப் பூசாரிகள் மருந்துகளைப் பயன்படுத்துவதில் திறமைசாலிகளாக விளங்கினர். நினவே (Nineveh) அரண்மனைகளில் தோண்டி எடுக்கப்பட்ட களிமண் பலகைகளில் வியாதிகளுக்கான சிகிச்சை முறைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக இருமலுக்கு ஒரு மூலிகையின் சாற்றைத் தரும்படி ஒரு சிகிச்சை முறையில் கூறப்பட்டுள்ளது.

உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்படும் நோயைக் குணமாக்கிக் கொள்ள இன்று நாம் அதற்காக விசேஷப் பயிற்சி பெற்ற வைத்தியர்களை நாடிப் போகிறோமில்லையா? இதே மாதிரி புராதன எகிப்திய வைத்தியர்களிடையேயும் விசேஷப் பயிற்சி பெற்றவர்கள் இருந்தார்கள். இவர்கள் பூசாரிகளும் வைத்தியர்களுமாக விளங்கினார்கள். கி. மு. 460ல் கிரேக்க சரித்திராசிரியர் ஹெரோடோடஸ் பண்டைய எகிப்தில் பிரயாணம் செய்து எழுதிய தமது குறிப்புக்களில் ''எகிப்தில் ஏராளமான வைத்தியர்கள் நிறைந்திருந்தனர். கண் நோய்களுக்குச் சிகிச்சை புரிவோர் தலையில் ஏற்படும் நோய்களைக் கவனிப்போர், பற்கள், வயிறு இவற்றில் வரும் வியாதிகளை மட்டுமே குணப்படுத்துவோர் மற்றும் மர்மமான வியாதிகளைப் போக்குபவர் என்று பல்வேறு துறையில் வல்லவர்களான வைத்தியர்கள் இருக்கிறார்கள்'' என்று எழுதி யிருக்கிறார்.

பாபிலோனியாவுக்கும் எகிப்துக்கும் இடையேயுள்ள பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் ஹீப்ருக்கள். யூதர்கள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் நோய்களைத் தருவதும் அவைகளைக் குணப்படுத்துவதும் கடவுள்தான் என்ற நம்பிக்கை யுடையவர்களாக இருந்ததனால் மருத்துவர்களிடம் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை.


புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்திய மன்னர்களான பாரோக்களின் கல்லறைகளுக்குள் சென்று பார்த்தபோது எகிப்தியர்கள் மருத்துவத்துறையில் எப்படி மேம்பட்டு விளங்கியிருக்கிறார்கள் என்பதைக் கண்டார்கள். பாபிரஸ் காகிதச் சுருளில் பூசாரி மருத்துவர்களைப் பற்றியும் அவர்களுடைய சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. மனிதனின் ஒவ்வொரு அவயவத்தையும் ஒவ்வொரு கடவுள் காப்பதாக எகிப்தியர் நம்பினார்கள். நோய்கள் கெட்ட ஆவிகளாலோ அல்லது மனிதன் கடவுளை அவமதிப்பதினாலோ ஏற்படுகின்றன என்று நம்பினர் எகிப்தியர். நோயுற்றவன் பிரார்த்தனை செய்வான். அவனது பிரார்த்தனை ஏற்கப்பட்டால் குணமடைவான். ஏற்கப்படாத நோயாளி பூசாரியின் உதவியை நாடுவான். இறந்தவனின் உடலைப் பக்குவமாகப் பாடம் செய்யும் முறை (மம்மி) பூசாரிகளுக்கே தெரியும், உரியதும் கூட. பாடம் செய்யும் முன் உடலிலிருந்து சில உறுப்புக்களை அகற்ற வேண்டும். ஆகவே புராதன எகிப்தியப் பூசாரிகள் உடற்கூறு (அநாடமி) பற்றி ஓரளவு அறிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். எகிப்திய மருத்துவர்களின் புகழ் புராதன உலகில் வெகுதூரம் பரவியிருந்தது.

எகிப்தியக் கோவில்களில் ஒரு பகுதி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவும் இளம் பூசாரி மருத்துவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் ஒதுக்கப்பட்டிருந்தன. சிகிச்சை முறையில் புதிய கண்டுபிடிப்புக்கள் செய்யப்பட்டன. இன்றைய 'பாண்டேஜ்' முறை எகிப்தியர்களால் உருவாக்கப்பட்டதுதான். வெட்டுக் காயங்களைத் தைக்கும் முறையும் எலும்பு முறிவுகளைக் குச்சி வைத்துக் கட்டி நேராக்கும் வழிகளையும் அறிந்திருந்தார்கள் புராதன எகிப்தியர்.

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தன் உடலின் மர்மங்களை ஓரளவு அறிந்துகொள்ள ஆரம்பித்திருந்தான். ஆனால் விஞ்ஞான ரீதியாக மருத்துவத் துறை வளரப் பல நூற்றாண்டுகள் ஆயின.

ஓ, அப்படியா?





கிட்டு: ஐயையோ இதுக்கு உடம்பே இல்லே. கால் மட்டும் தான் இருக்கு. உடம்பை யாராவது கிள்ளிட்டாளா?

பூசசி: யாரும் கிள்ளி எறியல்லே. எனக்கு உடம்பே கிடையாது. விநோதமாக இருக்கு இல்லையா? எட்டுக் கால்கள் இருப்பதினாலும் நான் கடலில் வசிப்பதினாலும் என்னைக் கடல் சிலந்தி என்பார்கள். ஆனால் என் பெயர் பிக்னோகோனிட் *(pycnogonid)* என்பது. உடம்பு மட்டும்தான் இல்லை என்று நினைக்காதே. சுவாசிப்பதற்கான சாதனம் கூட எனக்குக் கிடையாது.

கிட்டு: சாப்பிடவாவது செய்வாயா, அதுவுமில்லையா?

பூச்சி: சாப்பிடுவேன். அதுவும் ஒரு விசித்திரமான விஷயம். எனக்கு ஒரு வயிறு இல்லை; எட்டு வயிறுகள்! அதாவது வயிறு என்பது எட்டுப் பாகங்கள். ஒவ்வொரு காலும் என்னுடைய ஒவ்வொரு வயிறு. வயிறுகள் குழாய் போன்ற அமைப்புடையவை. முட்டைகளைத் தாங்கி நிற்கும் பைகளும் இந்தக் கால்களுக்குள்ளேயே உள்ளன. என் கண்கள் என் மூக்கு நுனியில் இருக்கின்றன. எனக்கு நான்கு மூக்குகள். ஒவ்வொரு மூக்கு நுனியிலும் ஒரு கண். ஆக நான்கு கண்கள். பிரபோஸிஸ் எனப்படும் இந்த மூக்குகள் உறுஞ்சும் அவயவமாகவும் பயன்படுகிறது.

கிட்டு: அப்படியானால் உனக்கு வாயும் கிடையாது என்று சொல்.

பூச்சி: உணவைத் திருடி உறிஞ்சி உட்கொள்ளும் எனக்கு வாய் எதற்கு? கடல் அனிமோன் *(Sea Anemone)* என்று ஒரு ஜந்து. பாறைகளின் மீது தாவரப் பூவைப் போல் ஒட்டிக்கொண்டிருக்கும். இது தன் உறுப்பைத் திறந்து உணவு உட்கொண்டு அதை ஜீரணிக்கத் தொடங்கும்போது நான் இதற்குள் என்னுடைய உறிஞ்சு கருவியான மூக்கை நுழைப்பேன். எனக்குத் தேவையான உணவை யெல்லாம் நான் கடல் அனிமோனின் வயிற்றிலிருந்து 'பம்ப்' செய்து வெளியேற்றிக் கொள்ளுவேன்.

கிட்டு: ஓ! அப்படியா சங்கதி?



நெப்டியூன் கிரகத்துக்கு ஒரு காலத்தில் யாராவது போக முடியுமானால் அவர்கள் அங்கு எத்தகைய காட்சியைக் காணுவார்கள் என்பதையே இந்தப் படம் சித்திரிக்கிறது. 'ஜலவாயு நிறைந்த கருமேகத்தின் கீழே உறைந்த அம்மோனியாவினால் மூடப்பட்டுள்ள நிலப்பரப்பு.' படத்தில் நிலப்பரப்பில் ஏற்பட்டுள்ள வெடிப்புகளைப் பாருங்கள். இதன் வழியாக கிரகத்தின் நடுமையத்தில் குளிராத நிலையிலுள்ள அக்கினிக் குழம்பில் மேலுள்ள அம்மோனியா உருகி விழுந்து தளதள வென்று கொதித்துச் சுடர் விடுகிறது.

நெப்டியூன் கிரகம்

கிருஷ்ணவேணி

சூரியப் பாதையில் எட்டாவது கிரகம் நெப்டியூன். ரோமானியர்களின் கடல் தேவதையின் பெயர் இது. கிரேக்கர்கள் இவரைப் **போஸிடான்** என்று அழைப்பார்கள். மழையின் அதி தேவதையாக நாம் யாரைக் குறிப்பிடுகிறோம்? வருண பகவானைத்தானே? நெப்டியூனையே நாம் வருணன் என்று அழைக்கிறோம். பெரிய கிரகங்களின் வரிசையில் கடைசியாக வருவது நெப்டியூன். அளவிலும் அமைப்பிலும் யுரானஸைப் போன்றது நெப்டியூன்.

1781ம் ஆண்டில் ஹெர்ஸ்செல் யுரானஸைக் கண்ட பிறகு அதைப் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார், **போவார்டு** என்ற பிரஞ்சுக்காரர். யுரானஸின் சூரியச் சுற்றுப் பாதையின் இயக்கங்களைக் கணித ரீதியில் முடிவு கட்டுவதுதான் போவார்டின் நோக்கம். ஆனால் அது அவர் எதிர்பார்த்தபடி இருக்கவில்லை. முன்னுக்குப் பின் முரணான கணிப்புக்கள் கிடைத்தன. அப்படியானால் பிரபல விஞ்ஞானியான நியூடனின் புவி ஈர்ப்புக் கொள்கை தவிடு பொடியாகுமே? கண்ணுக்குப் புலப்படாததொரு சக்தி யுரானஸின் இயக்கத்தை இழுத்துப் பிடிக்கிறது. அதனால்தான் இந்த மாறுபட்ட கணிப்புக்கள்.

1834ல் ராயல் கழகத்தின் வான சாஸ்திரியான **ஏரி** (*Airy*) என்பவருக்கு **ரெவரெண்டு ஹஸ்ஸே** ஒரு குறிப்பு அனுப்பினார். ''இன்னும் கண்டு பிடிக்கப்படாத ஒரு கிரகத்தின் ஈர்ப்புச் சக்தி யுரானஸின் சூரியப் பாதையைப் பாதிக்கிறது. இது பற்றி ஆராயுங்கள்'' என்று அந்தக் குறிப்பு கூறியது. ஆனால் ஏரி இக்குறிப்பைப் பெரிதாகக் கருதவில்லை.

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கணிதம் பயின்று வந்த மாணவரான **ஜான் கோச் ஆடாம்ஸ்** என்பவர் ஹஸ்ஸேயின் கருத்தையே கொண்டிருந்தார். கணிதத்தில் உயர்ந்த தகுதியைப் பெற்றதும் கிரகங்களின் சுழற்சியைக் கணக்கிட்டு அறியும் துறையில் பயிற்சி பெறுவதற்குச் சேர்ந்தார். கண்டுபிடிக்கப்படாத மற்றொரு கிரகத்தின் சக்திதான் யுரானஸின் பாதையைக் கணக்கிடும் போது நிச்சயமற்ற நிலைகளைத் தருவதற்குக் காரணம் என்ற கருத்தை 1843ல் உத்தேசமாகவும் 1845ல் உறுதியாகவும் தீர்மானித்தார். இனி இதற்கான ஆராய்ச்சியில் இறங்கியாக வேண்டியதுதான். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் வான சாஸ்திரியான **சாலிஸ்** என்பவரிடமிருந்து ஒரு சிபாரிசுக் கடிதத்துடன் கிரீன்விச் ஆராய்ச்சி நிலையத்தவரான ஜார்ஜ் ஏரியைக் காணச் சென்றார் ஆடாம்ஸ். அவரது துரதிர்ஷ்டம் ஏரி பிரான்ஸுக்குப் போயிருந்தார். பிரான்ஸிலிருந்து திரும்பியதும் ஏரி ஆடம்ஸுக்கு அழைப்பு விடுத்தார். வேறு வேலையாக கார்ன்வால்சென்று கொண்டிருந்த ஆடம்ஸ் தமது பயணத்தை முறித்துக் கொண்டு ஏரியைக் காணக் கிரீன்விச்





வந்தார். இப்போதும் ஏரியின் பேட்டி ஆடம்ஸுக்குக் கிடைக்கவில்லை. ஏரி வேறு முக்கிய அலுவல்களில் முடங்கிக் கிடந்ததால் ஆடம்ஸ் தம் ஆராய்ச்சிக் கணிப்புக்களின் குறிப்பை அய்ரியின் பார்வைக்கு அவரது மேஜை மீது விட்டு விட்டுத் திரும்பினார். ஆடம்ஸின் கணிப்பையும் குறிப்புக்களையும் சாவகாசமாகப் பார்வையிட்ட பிறகும்கூட ஏரி அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவில்லை. அதில் பல சந்தேகங்களையும் குறைபாடுகளையும் கிளப்பி அதற்கான விளக்கம் தரும்படி ஆடம்ஸுக்கு எழுதினார். ஆனால் இந்தத் தடவை ஆடம்ஸ் ஏரியின் கடிதத்துக்குப் பதில் போடவில்லை.

இதே சமயத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கணித மேதையான **லெவெரியர்** ஆடம்ஸின் வழியிலேயே ஆராய்ந்து கொண்டிருந்தார். 1846ல் தம்முடைய முடிவுகளைப் புத்தகமாக வெளியிட்டு அதை ஏரிக்கு அனுப்பி அதன் மீது ஆராய்ச்சி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஏரி கேம்பிரிட்ஜ் வான சாஸ்திரியான **சாலிஸிடம்** புதிய கிரகத்தைத் தேடும்படி கூறினார். அசிரத்தையாகவே சாலிஸ் வானப் பகுதிகளை ஆராயலானார். முதல் நான்கு தினங்களிலேயே சாலிஸுக்குப் புதிய கிரகம் இரு தடவைகள் தட்டுப் பட்டது. ஆனால் இதை 'க்ராஸ் செக்' செய்யத் தவறிவிட்டார் சாலிஸ்.


தம்முடைய வேண்டுகோளுக்குத் தக்க பலன் கிடைக்காததைக் கண்ட லெவெரியர் பாரிஸ் வான ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்பையும் பெற முடியாத நிலையில் ஜெர்மனியிலுள்ள வான ஆராய்ச்சி நிலையத்தின் உதவியை நாடினார்.



பெர்லின் ஆராய்ச்சி நிலையத்தில் ஆர்வமும் துடிப்புமிக்க இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். **காலி, டி அரஸ்ட்** என்பது இவர்கள் பெயர். நட்சத்திர மண்டலத்தின் புதிய கணிப்புக் குறிப்புக்களை வைத்துக் கொண்டு அரை மணி நேரத்தில் அந்தப் புதிய கிரகத்தைக் கண்டு பிடித்துவிட்டார்கள். லெவெரியர் உத்தேசமாகக் கணித்திருந்த இடத்திலிருந்து ஒரு டிகிரியும், ஆடம்ஸின் குறிப்புப்படி இரண்டு டிகிரியும் தள்ளி அந்தக் கிரகத்தின் இருப்பிடம் இருந்தது. **நெப்டியூன்** கண்டு பிடிக்கப் பட்டது 1846ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் தேதியன்று.

நெப்டியூன் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாவது வாரத்தில் அதற்கு ஒரு சந்திரன் (ஸாடலைட்) இருப்பதைக் கண்டு பிடித்தார் **லாஸெல்** என்பவர். இதற்கு **டிரிடான்** என்றும் பெயரிட்டார். இந்தச் சந்திரன் மற்ற கிரகங்களின் சந்திரன்களிலிருந்து பலவிதங்





வாடா மலர்

கடன் வாங்குவது பிச்சை எடுப்பதின் அடுத்த படிதான்.

- ஜப்பானியப் பழமொழி

முகஸ்துதி என்பது பரஸ்பரம் நடக்கும் ஓர் இழி தொழில். ஒருவருக்கொருவர் ஏமாற்ற விரும்பினாலும் ஒருவரும் ஏமாந்து போவதில்லை. **- கோல்டன்**

ஓ! அப்படியா?

கிட்டு: 'புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?' அப்படின்னு பழமொழி. உன் இனம்தானே அந்தப் புலி? நீ ஏன் இப்படிப் புல்லைத் தின்கிறாய்?

பூனை: அதுவா, உனக்கு ஏதாவது வயிற்றுக் கோளாறு என்றால் என்ன செய்கிறாய்?

கிட்டு: மருந்து சாப்பிடுவேன்.

பூனை: இப்போது நான் புல்லைத் தின்றதும் அதற்காகத்தான். இந்தப் புல் என் வயிற்றுக் கோளாறுக்கு மருந்து. நான்மட்டுமல்ல; நாய்களும் கூடச் சில வேளைகளில் இப்படிப் புல்லைத் தின்பதைக் காணலாம். வயிற்றைப் புரட்டினால் வாயில் விரலைக் கொடுத்துப் பலவந்தமாக வாந்தியெடுக்க முயற்சி செய்வதில்லையா நீங்கள்? இப்படி வாந்தி எடுப்பதற்காக எங்களுக்கு நாங்களே செய்து கொள்ளும் சிகிச்சைதான் இந்தப் புல்லுணவு, பசிக்காக அல்ல.

கிட்டு: 'பூனையும் மருந்துக்காகப் புல்லைத் தின்னும்' என்பதை இப்போது புரிந்து கொண்டேன்.



களில் மாறுபட்டது. சூரியப் பாதையில் உள்ள கிரகங்களுக்கான சந்திரன்களில் நெப்டியூனின் சந்திரனை இந்த டிரிடான்தான் மிகப் பெரியது. இதன் சுழற்சியும் மற்றச் சந்திரன்களின் சுழலும் பாதைக்கு நேர் எதிரானது. டிரிட்டான் நெப்டியூன் கிரகத்திலிருந்து 220,000 மைல் தூரத்தில் அதைச் சுற்றி வருகிறது. நெப்டியூனுக்கு இன்னொரு சந்திரனை 1964ல் **ஜி. பி. கியூப்பர்** என்பவர் கண்டுபிடித்தார். இதற்கு நெரீட் **(Nereid)** என்று பெயரிட்டார். டிரிட்டான் எப்படி மிகப் பெரிய சந்திரனோ அதற்கு நேர் மாறாக இது மிகச் சிறியது. மிகப் பெரிய சக்தி வாய்ந்த டெலஸ்கோப்பினால்கூட இதைக் காணமுடியாது.

நெப்டியூன் கிரகத்தைப் பற்றிய செய்திகள் என்னென்ன ?

சூரியனிலிருந்து 2797 மிலியன் மைல்களுக்கப்பால் இருக்கிறது இந்தக் கிரகம். இதன் குறுக்களவு 26,800 மைல்கள். சூரியனை ஒரு தடவை சுற்றி வர நெப்டியூனுக்கு ஆகும் காலம் 168 வருஷங்கள். தன் இருசில் தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொள்ள இதற்கு 15 மணியும் 48 நிமிஷங்களும் ஆகின்றன. அதாவது நெப்டியூனில் ஒரு நாள் என்பது சுமாராக பதினாறு மணி நேரம். பருவ நிலை எப்படி? சூரியனிலிருந்து மிக மிக தூரத்திலிருப்பதால் படு பயங்கரமான குளிர். வருணனல்லவா ? சராசரி வெப்ப நிலை மைனஸ் 325 டிகிரி ஃபாரன் ஹீட் என்றால் கற்பனை செய்து பாருங்கள்.

சில ஆராய்ச்சியாளர்கள் நெப்டியூன் உருவத்திலும் கனத்திலும் யுரானஸை விடப் பெரியது கனமானது என்கிறார்கள். அமோனியா உலோக வடிவிலோ, திடப் பொருளாகவோ இக்கிரகத்தில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் இங்கு கொஞ்சம் ஜல வாயுவும் காணப்படலாம். தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததால் தாவரங்களும் இருக்க முடியாது. மேல் பரப்பைப் பற்றிய தகவல்கள் ஆராயப்பட வில்லை. இக்கிரகத்தில் கெட்டியான பாகங்கள் எங்கு எப்படி உள்ளன என்பதும் அறியப்படவில்லை. சூரிய வெப்பம் வெளிச்சம்? உண்டு. ஆனால் மிக மிகக் குறைவானது, வீர்யமற்றது. மற்றக் கிரகங்களைப் போல இதையும் ஒருவித விஷ வாயு மண்டலம் சூழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

நந்து சுந்து மங்கு

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்

நந்து சுந்து இவர்களுடைய நண்பனைத் தெரியுமா உங்களுக்கு? நந்து சுந்துவையே தெரியாதே உங்களுக்கு. அதன் பிறகல்லவா அவர்களுடைய நண்பனைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு? நந்துவைப் பற்றிச் சொல்லும்போதே சுந்துவும் உங்களுக்கு அறிமுகமாகிவிடுவான். நந்துவும் சுந்துவும் அப்படி இணைபிரியாத நண்பர்கள். அரிச்சுவடி வகுப்பிலே ஆரம்பித்த அவர்கள் நட்பு, இன்று பெரியவர்களாகியும் வளர்ந்து வந்திருக்கிறது.

சுந்து நல்ல இரட்டைநாடி. சித்தானைக் குட்டியைப் போல் இருப்பான். நந்துவோ இதற்கு நேர் மாறு. இருவரையும் ஒன்றாகப் பார்க்கும்போது யாருக்கும் சிரிப்பு வராமல் இருக்காது.

நந்துவுக்கும் சுந்துவுக்கும் என்ன வேலை தெரியுமா? தொழில் என்று எதுவும் செய்யவில்லை அவர்கள். ஆனால் இருவருக்குமே இயற்கை எழிலைக் கண்டு மயங்குவதில் ரொம்ப ஈடுபாடு. நகரத்திலே வசிப்பதை விடக் கானகங்களிலே வாழ்வதையே விரும்புகிறவர்கள். அழகான பறவைகளையும் சின்னச் சின்ன அணில், மான், முயல் இப்படிப்பட்ட மிருகங்களை அவற்றுக்குத் துன்பம் தராத வகையில் பிடித்துச் சேகரிப்பார்கள். பிறகு அவைகளை அன்போடு பேணி வளர்ப்பவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். இதிலே நிறைய சம்பாதிக்க முடியாவிட்டாலும் இவர்களுடைய நாடோடி வாழ்க்கைக்குத் தேவையான பொருள் கிடைத்து வந்தது. எந்த மலையிலும், காட்டிலும் எவ்விதமான பருவநிலையிலும் கவலையின்றிக் கூடாரங்களில் தங்கி விடுவார்கள். இவ்விருவருடைய உயிர்த் தோழன்தான் மங்கு.

இந்த மங்கு யார் தெரியுமோ? ஒரு மனிதக் குரங்கு. சிம்பான்ஸி என்று படித்திருப்பீர்களே அதே இனத்துக் குரங்கு. ஆனால் ரொம்ப அறிவுள்ளது. பேசத்தான் தெரியாதே தவிர மனிதர் செய்யும் எல்லாக் காரியங்களையும் இதுவும் செய்யும். எதையும் புரிந்து கொள்ளும். அத்தனை புத்திசாலிக் குரங்கான இதைச் சினிமாக்காரர்கள் சும்மா விட்டு வைப்பார்களா? தங்கள் படங்களில் அதைப் புகுத்திப் பணம் பண்ணத் துடித்தார்கள். ஆனால் நந்துவும் சுந்துவும் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இப்போது நந்துவும் சுந்துவும் காஷ்மீரில் முகாமிட்டிருந்தார்கள், குளிர்ப் பிரதேசத்திலே வாழும் சில விநோதமான பறவைகள், மிருகங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக. இவர்களோடு மங்குவும் அங்கு போயிருக்கிறது. இப்போது நாமும் இந்த மூவரையும் சந்திக்கக் காஷ்மீருக்குப் போகலாமே! வாருங்கள் அடுத்த பக்கத்துக்கு.




நந்துவும் சந்துவும் ஏதோ காரியமாக வெளியே போயிருந்தார்கள். அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த 'சூப்'பின் மணம் மந்துவின் நாவில் நீர் சுரக்க வைத்து விட்டது. அடுப்பிலிருந்து அதை எடுக்க முயன்ற போது....
ஐயே! இதென்ன வேதனை?
கீழே கொட்டினால் என்ன? ஆகா! என்ன, ருசி, என்ன ருசி!
திரும்பிய நந்துவும் சந்துவும் நிலைமையை அறிந்ததும்...
நந்து, உன் வெல்ட்டைக் கொண்டா இப்படி. வர வர இந்த மந்துவோட விஷமம் தாங்க முடியல்லே. சரியான பூசை கொடுத்தால்தான் புத்தி வரும் இதுக்கு.
பசிச்சுது. அதனாலே அப்படி செஞ்சேன். அது தப்பா? அதுக்காக இப்படியா அடிப்பாங்க? இனிமே உங்க கூடவே இருக்கப் போறதில்லே. நான் போறேன்...
ஒரு பட்டுப்போன மரத்துக்குள் புகுந்தது மந்து. அதே நேரத்தில் அதன் மறுமுனையில் ஒரு கரடிக் குட்டியும் நுழைவது மந்துவுக்குத் தெரியாது.
இதென்ன மாயம்? அந்த மரம் தானாக உருண்டு போறதே! நம்ப மந்து எங்கே?


உருண்டு போன மரம் நதியில் போய் விழ, அதனுள்ளிருந்து மந்துவும் கரடிக் குட்டியும் வெளிப்படுகின்றன.
ஐயோ, கரடின்னு! பல்லைக் காட்டிண்டு பாயு வருதே. நானும் சும்மா இருக்கப் படாது.
உர்... உர்... உர்...ர்...
மந்து தன் பக்கத்தில் எழும்பிக் குதிக்க மிதவையின் மறுபக்கத்திலிருந்த கரடி நிலைதடுமாறி விழுகிறது.
அப்பாடா! ஒரு வழியாக் கரடியை ஆற்றோடு போக விட்டாச்சு... ஆ.. குளிர் ரொம்ப நடுக்கிறதே!
உடம்பு காய இந்த மணலிலே விழுந்து புரளுவோம். ஆகா என்ன ஜோரான மணல் பளபளன்னு மின்னுதே!
மந்துவைத் தேடி ஓடி வந்த நந்துவும் சந்துவும்...
டேய், மந்து! நீ இங்கேயா இருக்கே? ஏண்டா, கோபமா உனக்கு.
நீ உருண்டு புரண்ட இந்த மணலிலே தங்கம் கலந்திருக்கும் போலிருக்கு. நீ அதிர்ஷ்டக்காரண்டா மந்து.
தொடரும்





தேச தேசக் கதைகள் — பெரு

இளவரசனும் ஏழை அழகியும்

உலகம் தோன்றி வெகு நாட்களாக வில்லை. மெள்ள மெள்ள அது வளர்ந்து கொண்டிருந்தது. இளவரசன் பரிய காகா தனக்கு ஏற்ற மனைவியைத் தேடி ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தான். மாறுவேஷத்தில் தன் குடிமக்களி டையே பழகித் தனக்கேற்ற மங்கை யைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தான் இளவரசன் பரியகாகா.

கிழவனைப் போல் உருமாறித் தன் நாடெங்கிலும் சுற்றினான். ஆனால் சுய நலமும் பேராசையும் கொண்டவர்களே எங்கும் இருந்தனர். கிழவனாக இருந்த அவனிடம் யாரும் கருணையே காட்ட வில்லை. அவன் பசிக்கு உணவு தரவில்லை. அன்பாகப் பேசவில்லை. இதனால் மனம் நொந்த இளவரசன் ஒரு நாள் ஒரு மலையடிவாரத்தில் இருந்த ஊருக்கு வந்தான்.

செங்குத்தான மலைச் சரிவில் ஓர் ஏரி இருந்தது. அதிலுள்ள நீர் கீழுள்ள சமவெளியில் பாசனத்துக்குப் பயன் பட்டது. பரியகாகா அந்தக் கிராமத் தின் சந்தைப் பகுதியில் போய் உட் கார்ந்தான் ஓய்வெடுக்க. அப்போது அந்தக் கிராமத்தின் மிக அழகிய பெண் ஒருத்தி அங்கு வந்தாள். ஊருக்கு அந் நியனாக உள்ள ஒருவன் — ஒருவராலும் கவனிக்கப்படாமலும் உபசரிக்கப்படா மலும் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.


''இது என்ன அநியாயம்! இந்த முதியவரைப் பார்த்தால் பசியோடு இருப்பதாகத் தெரிகிறது. இவருக்குக் குடிக்கத் தண்ணீர்கூட யாரும் தர வில்லையே! ஏன், இவரைக் கவனிக்கக் கூட இல்லையே'' என்று எண்ணியவள் மாறுவேஷத்திலிருந்த இளவரசனின் அருகே சென்று மண்டியிட்டு அமர்ந் தாள். தன்னிடமிருந்த பானையிலிருந்து குளிர்ந்த பானத்தை ஒரு குவளையில் ஊற்றி அதை அவனிடம் நீட்டினாள். ''ஐயா பெரியவரே! பகல் போதின் வெப் பம் தாங்காது வேதனையுறும் உங்களுக்கு இப்பானம் இதமளிக்கும், குடியுங்கள்''





என்று கேட்டுக் கொண்டாள். 'சிச்சா' எனப்படும் தெம்பூட்டும் பானம் அது. அந்த அழகி அன்போடு கொடுத்த 'சிச்சா' பானத்தை அருந்திய பரிய காகா ''பெண்ணே! உன் அன்புக்கு மிக்க நன்றி. நீ அளித்த இந்தப் பானம் எனக்கு வாழ்வளித்து விட்டது. அதே மாதிரி உனக்கும் வாழ்வளிக்கப் போகிறது இந்தப் பானம். நான் கூறுவதைக் கவனமாகக் கேள். இந்தக் கிராமத்தை ஒரு பெரிய அபாயம் சூழ இருக்கிறது. ஆகவே உன்னுடைய குடும்பத்துடன் இன்றிரவே இந்த மலையைத் தாண்டி மறுபக்கமுள்ள கணவாய்ப் பகுதிக்குப் போய்விடு. நான் உன்னை மறுபடி சந்திக்கிறேன்'' என்று கூறிய மாறுவேஷத்திலிருந்த இளவரசன் வேகமாக அந்த இடத்தை விட்டுப் போனான். அவன் எங்கு போனான் என்பது யாருக்கும் தெரியாது.

அந்த அழகி அவசர அவசரமாகத் தன் வீட்டுக்குப் போனாள். தன் சுற்றத்தாரைக் கூட்டிக் கொண்டு அன்றிரவே மலையைத் தாண்டி மறுபக்கத்துக்குப் போய்விட்டாள். அவள் பத்திரமாக வேறு இடத்துக்குப் போனதும் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்தது. ஏராளமான நீரைத் தாங்க முடியாத அந்த ஏரியின் ஒரு பக்கத்தில் உடைப்பு ஏற்பட்டது. மலைச் சரிவிலிருந்து மண்ணையும் பாறைகளையும் உருட்டிக்கொண்டு கீழுள்ள கிராமத்தை நோக்கி ஏரி நீர் ஆவேசமாகப் பொங்கி வெளிப்பட்டு, அந்தக் கிராமத்தையே துடைத்து அழித்துக் கொண்டு போய்விட்டது. கிராமம் இருந்த இடமே தெரியவில்லை.



தம் குடும்பத்துடன் மலையின் மறுபக்கம் வந்த அழகிக்கு அங்கு வாழ்ந்தவர்கள் அடைக்கலம் அளித்தார்கள். தங்க இடமும் உழைக்க நிலமும் கொடுத்தார்கள். நிலத்தில் பாடுபடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஏரி நீர் உடைப்பெடுத்து அதன் நீரெல்லாம் ஓடிவிட்டதனால் விவசாயத்துக்குத் தண்ணீரே இல்லை. வறண்ட நிலையில் பயிரிட்ட சோளமெல்லாம் வாடி நின்றன.

ஒரு நாள் இளவரசன் பரியகாகா அதே கிழவன் வேஷத்தில் அழகி இருக்கும் இடம் வந்தான். வாடி நிற்கும் பயிர்களுக்கு அருகே கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தாள் அந்த அழகி.

''அழகியே! ஏன் அழுகிறாய்? உன் துன்பத்தின் காரணத்தைக் கூறு. நான் உனக்கு உதவி செய்கிறேன். நீ எப்போதும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்'' என்றான் கிழவன்.

''பெரியவரே! பயிரிட்ட சோளமெல்லாம் நீரின்றி வாடி நிற்கின்றன. இவை பிழைத்துப் பலன் தந்தால்தான் எனக்கு வாழ்வு. செத்துக்கொண்டிருக்கும் பயிர்களைப் பார்த்து என்னால் எப்படிச் சிரித்துக் கொண்டிருக்க முடியும்?'' என்றாள் கிராமத்து அழகி.

''தாகத்தினால் என் உயிர் போய்க் கொண்டிருக்கும்போது நீ எனக்குத் தண்ணீர் கொடுத்தாய். நான் இப்போது உனக்குத் தேவையானது எதுவானாலும் தருவேன். ஆனால் எனக்கு நீ ஒரு வாக்களிக்க வேண்டும். நீ என் மனைவியாகச் சம்மதிப்பாயா?'' என்று கேட்டான் கிழவன் வேஷத்திலிருந்த இளவரசன் பரியகாகா.

அழகி அவனைச் சில விநாடிகள் பார்த்தாள். பிறகு ''நாங்கள் வீடு வாசலை விட்டு உண்ண உணவுகூட இல்லாமல் இங்கு ஓடிவந்தபோது இப்பிராந்திய மக்கள் எங்களை வரவேற்று ஆதரித்தார்கள். அத்தகைய நல்ல மனம் படைத்த இவர்களுடைய நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும்படி உங்களால் செய்ய முடியுமானால் நான் என்னையே உங்களுக்கு அர்ப்பணித்துக் கொள்வதில் தயங்க மாட்டேன். நீங்கள் கிழவரானாலும், ஊர் ஊராக அலையும் பிச்சைக்காரரானாலும் சரி, உங்களை மனப்பூர்வமாக என் கணவராக ஏற்றுக்கொள்கிறேன்'' என்றாள்.

இளவரசன் பரியகாகா மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். இந்த நிலையிலும் பிறருடைய சுகத்துக்காகக் கவலைப்படும் அவளது நல்ல மனம் கண்டு மகிழ்ந்து போனான். ஏதும் பேசாமல் அங்கிருந்து கிளம்பிய அந்தக் கிழவன் முன்பு பெரிய ஏரியாக இருந்து இப்போது வற்றிவிட்ட மலைப் பகுதிக்குச் சென்று நின்று கொண்டான். வானத்துப் பறவைகளையும் கானகத்து விலங்குகளையும் கூவி அழைத்தான். அவை யெல்லாம் அவனுடைய உற்ற தோழர்கள்.

''தோழர்களே! உங்கள் உதவி எனக்குத் தேவை. என் உள்ளம் கவர்ந்த பெண்ணின் மகிழ்ச்சிக்காக இந்த ஏரி மறுபடி நீரால் நிரம்ப வேண்டும். அங்கு வாடி நிற்கும் பயிர்களெல்லாம் தலை நிமிர்ந்து சிரிக்க வேண்டும். அப்போது



புகைப்படங்கள் : நாகலிங்கம்



'ஸ்மைல் ப்ளீஸ்!'

என் அழகியின் முகத்திலும் மகிழ்ச்சி மலரும். ஆகவே ஏரியின் உடைப்பை நேராக்கி, இங்கிருந்து அங்கு வறண்டு கிடக்கும் நிலங்களுக்கு நீர் பாய வாய்க்கால் வெட்டித் தர வேண்டும்!'' என்று கேட்டுக்கொண்டான் இளவரசன்.

உடனே பறவைகளெல்லாம் பறந்து சென்றன. கூழாங் கற்களையும் சரளைக்கற்களையும் பாறைகளையும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவரையில் அலகினுல் கொண்டு வந்து குவித்தன. உடைப்பு ஏற்பட்ட பகுதியில் ஒரு பெரிய அணையே எழும்பலாயிற்று. மிருகளுக்குத் தலைமை தாங்கி வேலை வாங்கியது நரி. ஏனென்ருல் மிருகங்களிலேயே புத்திசாலி அது தானே? ஏரியின் மறு கோடியில் ஒரு வாய்க்காலைத் தோண்டின மிருகங்களெல்லாம். இள வரசன் பரியகாகா கூறிய பகுதிக்கு ஏரி நீர் ஓடும்படியாகத் இட்டமிட்டு உழைத்தன.

வேலை முடியும் தறுவாயில் ஒரு கௌதாரிப் பறவை நரியின் மூக்குக்கு அருகே 'பிச்', 'பிச்' என்றபடி பறந்து சென்றது. தான் ஒரு கட்டிடக் கலைஞன் என்பதை மறந்த நரி தன் இயற்கைக் குணத்தின்படி கௌதாரியைத் துரத்திக் கொண்டு ஓடியது. வேலை தடைப்பட்டது. ஏரி நீர் வழி மாறி வேறு பக்கமாய்ப் பாயலாயிற்று.

உடனே நரியின் இடத்தை ஒரு பாம்பு ஏற்றுக் கொண்டாலும் அது அத்தனை திறமைசாலி யில்லையாதலால் அந்த ஏரியின் நீரில் பெரும்பாலும் மலையின் வேறு பக்கத்தில் வீணுகப் போய்க் கொண்டிருப்பதை மாற்றி அமைக்க அதனுல் முடியவில்லை.


இருந்தாலும் அழகி இருந்த பகுதியின் வயல்களுக்குப் போதுமான நீரை ஓரளவு அவை ஏரியிலிருந்து திருப்பி விட்டன.

பெரு என்ற நாட்டின் வளமான பகுதியாக அந்தப் பிரதேசம் மாறியது.

பூமி செழிக்கவே, இளவரசன் பரியகாகா அழகியிடம் வந்து, வாக்குப்படி தன்னைக் கணவனுக ஏற்கும்படி கேட்டுக்கொண்டான்.

''என் அரச பரம்பரைக்கு அருகதையுடைய ஒரு பெண்ணை நான் கண்டு விட்டேன். பெண்ணே! நீ நினைக்கிறபடி நான் கிழவனே, பிச்சைக்காரனே இல்லை'' என்றவாறு தன் வேஷத்தைக் கலைத்துச் சுந்தர புருஷனுக நின்ருன். ''நான்தான் இளவரசன் பரியகாகா'' என்ருன். அப்போது அந்த அழகியின் முகம் இன்னும் அழகாக மலர்ந்தது. அவளை மனைவியாக்கிக் கொண்ட பரிய காகா பல காலம் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான்.

-அவிட்டம்



பாதையை மறித்த பூதம்

"விகேயெம்"

அது ஒரு பயங்கரமான இரவு.

பேய்கள் உலாவும் வேளை என்பார்களே அந்த நேரம். நடுக்க வைக்கும் குளிர். மூடுபனி வேறு. கைநீட்டும் தூரத்தில் இருப்பதைக் கூடக் காண முடியாதபடி அப்படியொரு பனிமூட்டம். எதுவும் நடக்கலாம் அந்தக் கொடிய இரவிலே. அந்தக் குளிர் இரவைக் கிழித்துக் கொண்டு அசுர வேகத்தில் போய்க் கொண்டிருந்தது அந்த எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி.

அப்படிப்பட்ட இரவில் ரயில் வண்டியைச் செலுத்திக் கொண்டு போவதென்பது சாதாரணமான காரியமல்ல. வெல்வெட்டுப் படுதாக்களைப் போல மடிப்பு மடிப்பாக ரயில் வண்டியைச் சுற்றி, நாலா பக்கமும் மூடுபனி கனமாக இறங்கி யிருந்தது. மிகச் சக்திவாய்ந்த அதன் 'ஹெட் லைட்' பனி மூட்டத்தைக் கிழித்து ஏற்படுத்திய இடைவெளி வழியாக எஞ்சின் டிரைவர் தம் கண்களை இடுக்கியபடி பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தார். எப்போதுமே நேரந் தவறாமல் வண்டியைச் செலுத்திக் கொண்டு போகக் கூடியவர் அவர். இன்று அவர் உடலில் ஒரு பதற்றம். அதற்கு மூடு பனியும் அந்தப் பயங்கர இரவும் மட்டும் காரணமல்ல. அன்று அந்த வண்டியில் நூற்றுக் கணக்கான பிரயாணிகளோடு அந்த நாட்டின் மகாராணியே பிரயாணம் செய்து கொண்டிருந்தார். டிரைவருடைய பதற்றத்துக்குக் காரணம் அதுதான்.

என்ஜின் தலை விளக்கு இருளைக் கிழித்து உண்டாக்கிய ஒளிப் பாதையையே பார்த்தபடி வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்த டிரைவரிடமிருந்து 'ஆ!' என்ற ஒலி கிளம்பியது. அவர் நெஞ்சுத் துடிப்பு நின்றே விட்டது ஒரு கணம். பளிரிட்டுக் கொண்டு சென்ற ஒளியின் நடுவே அது என்ன? தண்டவாளத்தின் குறுக்கே

கறுப்பு அங்கி அணிந்த ஓர் உருவம் — தன் இரு கைகளையும் வீசியபடி நின்றது. பூதமா? பிசாசா? அவர் கைகள் பிரேக்கைப் பரபரப்புடன் அழுத்தமாகப் பிடித்து இயக்கியது. விரைவு வண்டியும் தண்டவாளங்களில் நெருப்புப் பொறி உண்டாகக் கிரீச்சிட்டபடி தன் ஓட்டத்தை நிறுத்தியது.

பீதியும் குழப்பமும் அடைந்த பிரயாணிகளை ஒருவகையாகச் சமாதானப்படுத்திய பிறகு ரயில் வண்டி அதிகாரிகள் வண்டியிலிருந்து இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தார்கள். தேடினார்கள். குரல் எழுப்பிக் கூப்பிட்டார்கள். வண்டியைக் கை வீசி நிறுத்திய அந்த மர்ம உருவம் எங்கே? யாரையுமே காணவில்லை. அது—அந்த உருவம் யாராக இருக்கும்? அவர் ஏன் வண்டியை இப்படி நிறுத்த வேண்டும்? ரயில் வண்டியிலிருந்த அதிகாரிகளுக்கு ஒரே வியப்பு. முடிவில் யாரோ வேடிக்கைக்கு விளையாட்டாக இப்படிச் செய்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள். எஞ்சின் டிரைவர் கூட இந்த முடிவை ஏற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வந்து விட்டார். ஆனாலும் உள்ளூற அவருக்கு ஏதோ ஓர் உறுத்தல். கறுப்பு உருவத்தைக் கண்டவர் அவர்தானே?

வண்டியை மறுபடி கிளப்பு முன் முடிவாக உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்த அவர் வண்டியிலிருந்து கீழே குதித்து ரயில் பாதை வழியே கொஞ்ச தூரம் நடந்து போனார், ஏதாவது தகவல் தெரிகிறதா என்று பார்க்க. கொஞ்ச தூரம் சென்றதும் திடீரென்று அவர் முகம் வெளுத்தது. விழிகள் பிதுங்கி வெளியே வந்தன. நெஞ்சத் துடிப்பு அதிகமாயிற்று. அப்படி அவர் அங்கே கண்ட காட்சிதான் என்ன?

வண்டி நின்றிருந்த இருநூறு கஜங்களுக்கு அப்பால் ஒரு பாலம். அதன் மீது சென்ற ரயில் பாதை — அப்படியே துண்டிக்கப்பட்டு நதிக்குள் சரிந்து விழுந்து கிடந்தது. காட்டாற்றில் வந்த வெள்ளம் செய்திருந்த வேலை அது. அந்த மர்ம மனிதன் அப்படி ரயில் பாதையின் குறுக்கே நின்று வழி மறித்திருக்காவிட்டால் அந்த வண்டி நதிக்குள் தலைகுப்புற விழுந்து அத்தனை பிரயாணிகளின் உயிரையும் பலி கொண்டிருக்கும். அத்தனை குளிரிலும் வியர்வையால் குளிப்பாட்டப்பட்டவராக ஓடினார் டிரைவர், ஆண்டவனுக்கு நன்றி செலுத்தியபடி.

ரயில் பாதை செப்பனிடப்பட்டு வண்டி போய்ச் சேர வேண்டிய ஊரை அடைந்த பிறகும் கூட அந்த மர்மம் விடுவிக்கப்படவில்லை. எல்லோரும் நிம்மதி யடைந்தாலும் டிரைவருக்கு அமைதி ஏற்படவில்லை. ஷெட்டிலே எஞ்சினைச் சுற்றிச் சுற்றி வந்தவருக்கு ஹெட் லைட்டைச் சோதனையிடத் தோன்றியது. அதன் கண்ணாடியைத் திறந்தபோது விளக்கின் அடியிலே ஒரு பெரிய பட்டுப் பூச்சி இறந்து போய்க்கிடந்தது. அதைத் தம் உள்ளங்கையில் வைத்துக் கொண்டவர் சில கணங்கள் யோசித்தார். பிறகு ஒரு காரியம் செய்தார். பட்டுப்பூச்சியின் விரைத்த சிறகுகளை விரித்து வைத்துப் பதப்படுத்தினார். ஜாக்கிரதையாக அதை ஹெட் லைட்டின் கண்ணாடி மூடியின் மீது — இறக்கைகள் விரிந்த நிலையில் — ஒட்ட வைத்து விளக்கை மூடினார். பிறகு எஞ்சினுக்குள் ஏறித் தலை விளக்கின் ஸ்விட்சைப் போட்டார். அடுத்த விநாடி ''ஆ...!'' நான் நினைத்தது சரிதான்!'' என்ற வியப்பொலி அவரிடமிருந்து எழுந்தது. லோகோ ஷெட்டின் உட்புற இருளைக் கிழித்து நீண்டு நின்ற ஒளி வெள்ளத்தின் நடுவே — அதே கறுப்பு அங்கி அணிந்த உருவம் நின்று கொண்டிருந்தது. ஆனால் இப்போது அதன் கரங்கள் அசையவில்லை. நிலையாக அசையாமல் நின்றன!

ரயில் வண்டியைப் பயங்கரமான விபத்திலிருந்து காப்பாற்றிய மர்ம உருவம் இந்தப் பெரிய பட்டுப்பூச்சிதான். உடைந்த பாலத்தை வண்டி நெருங்கு முன்பாக எப்படியோ இந்தப் பட்டுப் பூச்சி ரயில் வண்டியின் பிரகாசமான ஒளியினால் கவரப்பட்டுப் பறந்துவந்திருக்கிறது. கனமான மூடுபனியினால் விளக்கில் மோதிச் சிக்கிய பூச்சியின் நிழல் அங்கி அணிந்த உருவமாகக் கைகளை வீசி நிற்பது போலத் தோன்றி இருக்கிறது. அந்தப் பூச்சி தன் உயிரைக்கொடுத்துப் பல உயிர்களை—அந்த நாட்டின் மகாராணியையே காப்பாற்றி விட்டது. இது கதையல்ல. நிஜமாகவே நடந்த சம்பவம். காப்பாற்றப்பட்ட மகாராணி யார் தெரியுமா? இங்கிலாந்தைப் புகழுடன் ஆண்ட விக்டோரியா மகாராணிதான். லண்டனுக்குப் போய் இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி சாலைக்குப் (*Museum of Natural History*) போய் விக்டோரியா பட்டுப்பூச்சி (*Victoria Moth*)யைக் காண வேண்டுமென்று கேட்பீர்களானால் ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளிருக்கும் பெரியதொரு பட்டுப் பூச்சியைக் காட்டுவார்கள். மகாராணியின் உயிரைக் காத்த பட்டுப்பூச்சி அதுதான். பிரிட்டிஷ் மக்கள் அதை 'உருவமற்ற கொடிக்காரன்' (*Phantom Flagman*) என்று அழைக்கிறார்கள்.

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்... இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும் உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்



Sista's-INC-362-C/75 Tam


ராமபிரான் லட்சுமணனைக் கொண்டு விபீஷணனுக்கு லங்காதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்விக்கிறார்.
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்:
35
வெற்றிச் செய்தியோடு அனுமன் அசோக வனம் போகிறார்.
தேவி, உங்கள் கற்பு வென்றது. அண்ணல் வெற்றி பெற்றார். ராவணன் மாண்டான்.
வாயுபுத்திரா, இந்த இன்பச் செய்தியைக் கூறிய உனக்கு விண்ணுலக ஆட்சியையே கொடுத்தாலும் போதாது.
தேக பலம், புத்தி பலம், உத்தம குணம், வாக்குவன்மை இவ்வளவிருந்தும் அகம்பாவமில்லாதிருக்கும் உன்னை மகனாகப் பெற்ற வாயு பாக்கியசாலி. நீ நீடூழி வாழ்க.
அன்னையே தங்களைப் படாதபாடு படுத்தி வைத்த இந்த அரக்கிகளை வதைத்து மகிழத் துடிக்கிறேன். உத்தரவு தர வேணும்.
ஆஞ்சநேயா, இந்த அபலைகளைப் பழி வாங்குவது நமக்கு அழகல்ல. அரச ஆணைப்படி நடந்த அவர்களைக் கொல்லலாமா? பிழை பொறுத்தலே பெரியோருக்கு அழகு.
அன்னையே பலவும் கற்ற நான் தங்களிடமிருந்து அன்பின் உபதேசம் பெற்றேன்.
அண்ணலே, தாங்கள் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடியுமுன் எந்த நகரத்துக்குள்ளும் போக மாட்டீர்கள் என்றால், தங்கள் நினைவாகவே உள்ள தேவியை இங்கு வரவழைக்கலாகாதா?


ராமபிரான் ஆணைப்படி விபீஷணன் சீதையை அழைத்து வருகிறான்.
ஹே, சீதே! என் குல கௌரவத்தைக் காக்கவே உன்னை சிறை மீட்டேன். பிறர் வீட்டிலிருந்த உன்னோடு நான் வாழ்ந்தால் உலக அபவாதம் ஏற்படும். ஆகவே நீ உன் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம்.
லட்சுமணா, அவதூறு என்ற வடு பட்ட பின் இனி நான் உயிர் வாழ மாட்டேன். இப்போதே தீமூட்டு. அதில் விழுந்து உயிர் துறக்கிறேன்.
லட்சுமணன் தீ மூட்ட, சீதை அதில் குதிக்கிறாள்.
ஸ்ரீராமா! தங்கள் தேவி மகாலக்ஷ்மியல்லவா? இவரை என்னால் எப்படி எரிக்க முடியும்? இவரை ஏற்று அயோத்தியில் முடிசூடி உலகை ரட்சியுங்கள்.
வானுலகோரும் அக்கினியைப் போலவே வேண்டுகிறார்கள்.
சீதையை ராவணனால் நெருங்கமுடியாதென்பதை நான் அறிவேன். ஆனாலும் உங்கள் வாயினால் சொல்லப்பட்டால்தான் அதை உலகம் நம்பும். அதற்காகவே இந்த அக்கினிப் பரீட்சை.
வைதேகி! உன் மீது எனக்குச் சிறிதும் சந்தேகமோ வெறுப்போ இல்லை, தெரிந்ததா? கண் கலங்கியது போதும், வா இப்படி...
ஜெய, ஜெய சீதாராம்!
தொடரும்



ராட்சத மிருகங்கள்

கிருஷ்ணவேணி

கடலின் மடியில்

இன்று நாம் உலகில் காணும் விலங்குகளும் பறவைகளும் உலகம் தோன்றிய காலத்திலிருந்து இப்படியே தான் இருக்கின்றனவா?

இல்லை. இன்று காணும் விலங்குகள் ஆதியில் இருக்கவில்லை. அதே மாதிரி உலகம் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மிருகங்கள் இன்று இல்லை. அன்றைய மிருகங்களின் வழித் தோன்றல்களாகச் சில மிருகங்கள் இன்று இருக்கின்றன. தாவரங்களும் அப்படியே. இன்று நீங்கள் காணும் மா, பலா, தேக்கு, ஓக், பைன், சால், ஆல் ஆகிய விருட்சங்கள் உலகம் தோன்றியபோது இல்லை ராட்சத உருவில் ஒருவகைத் தாவரமே இருந்தது. அவற்றுக்கு க்ளப் மாஸ் *(Club Moss)*, குதிரை வால் *(Horsetail)*, ஃபெர்ன் *(Fern)* என்று பெயர்.

இன்று நீங்கள் காணும் கண்டங்கள் இப்போது உள்ளபடியே முதன் முதலில் தோன்றினவா?

இல்லை. சூரியன் என்ற அக்கினிக் கோளத்திலிருந்து விடுபட்ட சிறியதொரு துண்டு நெருப்புக் கோளமாகவே பல்லாண்டுகள் இருந்து பிறகு குளிர்ந்தபோது பூமியின் மேல் பரப்புக் கெட்டிப்பட்டுக் கண்டங்கள் தோன்றின. அப்போது அது இப்படி இருக்கவில்லை. இன்றையத் தோற்றத்தை உலகம் அடைய எத்தனையோ லட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகியுள்ளன.

உலகம் தோன்றியது ஒரு தனிக் கதை. ஒரே நிலப்பரப்புக் கண்டங்களாக உடைந்து பிரிந்தது ஒரு தனிக் கதை. ஆனால் உலகிலே ஜீவராசிகள் தோன்றியபோது அவை எப்படி இருந்தன, வாழ்ந்தன, அழிந்தன என்பதை மட்டும் இங்கு பார்ப்போம்.

50.00 00 000 ஆண்டுகளுக்கு முன்னால் உலகில் பல பிராணிகள் வாழ்ந்து வந்தன. ஆனால் அவையெல்லாம் நீருக்குள்தான் இருந்தன. ஆம், அப்போது உலகம் முழுவதுமே கடலால்தான் மூடப்பட்டிருந்தது. இப்படிக் கடலில் வாழ்ந்த சரித்திர காலத்துக்கு முற்பட்ட பிராணிகள் எல்லாமே சிறியவை. இவற்றுக்கு டிரைலோபைட்டுகள் *(Trilobites)* என்று பெயர். இவற்றில் சில நான்கு அங்குல நீளமே இருந்தன. அந்தச் சமயத்தில் வாழ்ந்த பிராணிகளில் இவையே மிகப் பெரியவை என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? ஆனால் உண்மை. இவை கடலில் ஏராளமாக வாழ்ந்தன. இவை வாழ்ந்தபோது இவற்றுக்கு இப்படியொரு பெயரிடப் படவில்லை. பெயர் சூட்ட மனிதர்கள் அப்போது உலகில் தோன்றவில்லை.

பிற்காலத்தில் விஞ்ஞானிகள் முதன் முதலில் உலகில் வாழ்ந்த இத்தகைய கடல் ஜீவராசிகளுக்கு டிரைலோபைட் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த ஜீவராசிகளின் உடலைக் கெட்டியான ஓர் ஓடு மூடியிருந்தது. இது நீளவாட்டத்தில் மூன்றாகப் பகுக்கப்பட்டதாக இருந்தது. ஆகவேதான் இவற்றுக்கு 'டிரைலோபைட்' என்று பெயரிட்டனர்.

இன்று நாம் காணும் நண்டு, அலவன் என்ற லாப்ஸ்டர், கிரே ஃபிஷ் ஆகிய




வற்றுக்கு இந்த டிரைலோபைட்டுகள் மூதாதையர். கடற்கரையின் ஆழமற்ற பகுதிகளில் இவை வாழ்ந்தன. கடலுக்கடியில் இன்று நண்டு, லாப்ஸ்டர் ஆகியவை எப்படி இணைக்கப்பட்ட கால்களால் நடக்கின்றனவோ அப்படி நடந்தன. இறகு போன்ற செவுள்கள் நீந்தவும் சுவாசிக்கவும் இவற்றுக்கு உதவின. டிரைலோபைட்டுகள் மற்ற ஜீவராசிகளை — இவை உயிருள்ளதாகவோ இறந்ததாகவோ இருக்கலாம் — உண்டு வாழ்ந்தன. தாவரங்களையும் இவை சாப்பிட்டன. நீண்ட உணர்ச்சிக் கருவிகளும் கூட்டுக் கண்களும் இவற்றுக்கு உணவு தேட உதவியாக இருந்தன.

இன்றையப் பிராணிகளோடு ஒப்பிடும்போது டிரைலோபைட்டுகள் மிக எளிமையானவை. ஆனால் இதற்கும் முன்னால் வாழ்ந்த ஜீவராசிகளை விட இவை எத்தனையோ முன்னேற்றமடைந்திருந்தன. 'அப்படியானால் டிரைலோபைட்டுகளுக்கும் முன்னால் உலகில் ஜீவராசிகள் இருந்தனவா?' என்று கேட்கத் தோன்றுகிறதில்லையா? உலகில் உயிரினங்கள் தோன்றியது எப்போது என்று சொல்ல முடியாது.

கோடானுகோடி பிலியன் ஆண்டுகளுக்கு முன்னால், டிரைலோபைட்டுகள் தோன்றுவதற்கும் முன்னே, உலகில் ஒரு வகை ஜீவராசிகள் வாழ்ந்திருக்கக் கூடும். இவை ஒரே ஒரு செல்லுடனும் மிக மிக நுண்ணியவையாகவும் இருந்திருக்கும். முதல் பிராணிகளும் மனிதனும் தோன்றுவதற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவை இந்த டிரைலோபைட்டுகள் என்பது விஞ்ஞானிகளின் முடிவு.


நூறு மிலியன் ஆண்டுகள் இந்த டிரைலோபைட்டுகள் ஆட்சி புரிந்தன. இவற்றுக்குப் பல சுற்றத்தார்கள் தோன்றினர். இவற்றின் ஆரம்ப காலத்தில் கடல் பஞ்சு, பவழம், புழுக்கள் ஆகியனவும் தோன்றின. புராதன நத்தைகள், நட்சத்திர மீன்கள், மட்டி என்ற கிளிஞ்சல்கள் ஆகியவை இக்காலத் தோன்றல்களே. பிராக்கியோபாடு (Brachiopod) என்று ஒருவகை, கிளிஞ்சல்களைப் போல. ஆனால் உள்ளேவேறுபட்டஉடலமைப்பு.


டிரைலோபைட்டுகளின் ஆட்சி காலத்தின் பிற்பகுதியில் கடல் அல்லிகள் (Sea l'lly) தோன்றின. இதையடுத்து செஃபலோபாடு (Cephalopods) என்ற நத்தை இனம் தோன்றிபது. இவற்றுக்குத் தலையும் காலும் உண்டு. கடல் அல்லிகளுக்கு க்ரைனாய்ட் (Crinoid) என்றும் ஒரு பெயர். இவையெல்லாம் பார்வைக்குத் தாவரங்களைப் போலவே இருக்கும். பிராணிகளைப் போல இருக்காது. வேர்களைப் போன்ற பிடிமான உறுப்பினால் பாறைகளைப் பற்றிக் கொண்டிருக்கும். நீண்ட அடித்தண்டும் இதழ்களும் பார்வைக்கு மலரைப் போலவே இருக்கும்.



இன்றைக்குக் கடலில் வாழும் ஸ்குவிட் (Squids) எனப்படும் ஒரு வகைச் சிப்பி மீன்களின் மூதாதைகள்தான் இந்த செஃபலோபாடுகள். இவற்றுக்கு ஓடு உண்டு. சிலவற்றின் ஓடு ராட்சத நத்தையினுடையதைப் போல் சுருண்டிருக்கும். சிலவற்றின் ஓடுகள் நீளமாகவும் இருக்கும். இதன் முடிவில் இப்பிராணியின் தலையும் கைகளும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும், எதிரிலுள்ள படத்தில் ஒரு டிரைலோபைட்டையும் மூன்று கடல் அல்லிகளையும் பவழப் பூச்சிக் கூட்டையும் பார்க்கிறீர்கள். பவழத்தை உருவாக்கும் பூச்சிகள் இங்கு காண்பிக்கப்படவில்லை. இத்தகையதொரு காட்சியை நானூறு மிலியன் ஆண்டுகளுக்கு முன்னே இந்த உலகில் கண்டிருக்கலாம்.

ஆழ்கடலின் தரையிலுள்ள டிரைலோபைட்டுகள் எல்லாமே படத்தில் காட்டியுள்ளபடி இருக்காது. இவற்றின்மேலுள்ள கெட்டியான ஓடு சிலவற்றுக்கு மிக மிக சாதாரணமாக இருக்கும். சிலவற்றுக்கு நீளமாக இருக்கும். ஆனால் அவற்றினால் இவைகளுக்கு எவ்வித பயனும் கிடையாது.





"வர வர நீங்க ரொம்ப ஊதிக் கிட்டு வரீங்க மாமா!"





சங்கீத வித்வான்: டாக்டர் அமரேசன் என்னைக் கொஞ்ச நாளைக்குப் பாடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்!

மற்றவர்: அவர் பரம ஞானஸ்தராச்சே, சரியாகத்தான் சொல்லியிருப்பார்!

"அடிக்கடி செருப்பு வாங்கிப் பணத்தைப் பாழ்பண்ணறயே!"

"செருப்புத் தேயாமலிருக்கத்தான் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுங்கன்னு உங்களைக் கேட்டுக்கிட்டிருக்கிறேன்."

"கொஞ்சம் கூடப் பணக் கஷ்டமே தெரியலையே உனக்கு. தாகம்னு உடனே ஒரு ரூபாய் கொடுத்துப் 'பட்' டுன்னு உடைச்சு ஒரு டிரிங்க் சாப்பிடணுமா? யோசித்துச் செலவு செய்ய வேண்டாமா?"

"நன்னு யோசித்து விட்டுத்தான் சாப்பிடுகிறேன் மாமா. பத்து நாட்களுக்கு முன்னால் எடுத்த தாகத்துக்கு இன்னிக்குத்தான் டிரிங்க் சாப்பிடுகிறேன்!"




■ ■ ■

முயல்: குரங்காரை வைத்துக் கீழ்க் கோர்ட்டில் வாதாடினேன். கேஸ் தோற்றுப் போய் விட்டது. அதனால் ஒட்டைச்சிவிங்கியாரை வைத்து மேல் கோர்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன்.



"கஷ்டமாய்க் காசு சம்பாதிப்பது எப்படி என்பதை ஒருவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார். அதை உனக்கும் சொல்லித் தரட்டுமா?"

"வேண்டவே வேண்டாம். அதுக்கு ஐம்பது பைசா கொடுக்கணும்னு என்னிடமிருந்து கஷ்டமாய்ப் பிடுங்கிண்டு போயிடுவே. உன்னைத் தெரியாதா எனக்கு?"







தெரியுமா ?



1714. தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த கரான்மர் (Karan Murr) என்ற பெண் 1965-ல் (Back Stroke) என்னும் மல்லாந்த நிலையில் பின்னோக்கிச் செல்லும் நீச்சல் பந்தயத்தில் உலக ரிகார்டை ஏற்படுத்தினாள். அப்போது அவளுக்கு என்ன வயது தெரியுமா?

1715. பெங்குவின் பறவைகளில் எத்தனை வகைகள் உண்டு?

1716. மாரிக் காலத்தில் துருவக் கரடிகளின் உடல் வெள்ளை வெளேர் என்றிருக்கும். அப்படியானால் கோடையில் அதன் உடல் நிறம் என்ன?

1717. புலிக் குட்டிகள் எந்த வயதில் நன்கு வளர்ந்த புலிகளாகக் கருதப்படும்?

1718. துருக்கியர்கள் கிரீஸ் நாட்டை வெற்றி கொண்டது எந்த நூற்றாண்டில் என்று சொல்ல முடியுமா?

1719. இலங்கையில் பௌத்த தர்மத்தைப் பரப்புவதற்காகப் பௌத்த பிட்சுக்கள் அங்கு போய் இறங்கியது எந்த ஆண்டில்?

1720. இலங்கையின் புராதனத் தலைநகர் எது?

1721. இலங்கை முழுதும் பெரஹரா (Peraheras) என்ற விழா ஒன்று தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தப் பெரஹரா என்பது என்ன?

1722. உடலின் ரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர் ஒரு பிரிட்டிஷ் மன்னரின் மருத்துவர். மன்னர் யார், மருத்துவரின் பெயர் என்ன?

1723. ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிஷங்களுக்கும் குறைவான நேரத்தில் 1954-ம் ஆண்டு மே மாதத்தில் முதல் முதலாக ஓடிக் கடந்தார் ஒருவர். இவர் பெயர் என்ன?

1724. இந்திரனுடைய வாகனமான யானையை ஐராவதம் என்கிறோம் — இது வெள்ளை நிறம். பர்மியர்கள் வெள்ளை யானையைக் கடவுளின் அவதாரமாக மதிக்கின்றனர். ஆனால் அமெரிக்கர்கள் 'ஒயிட் எலிபெண்ட்' என்ற வார்த்தையை வேறு பொருளில் பயன்படுத்துகின்றனர். ஏன்?

1725. யானைகளின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?

1726. ஸ்காட்லாந்தியரின் நாடோடி நடனத்துக்குப் பெயர் என்ன?

1727. மஸுர்கா (Mazurka) என்ற நடனம் எந்த நாட்டுக்கு உரியது?


1728. லண்டனில் 'நேஷனல் காலரி' எங்குள்ளது?

1729. ஆமைகள் பொதுவாக எவ்வகையான ஆகாரங்களில் உயிர் வாழுகின்றன?


1730. ஆகாரங்களைத் தாடையில் அடக்கி வைத்துக் கொள்ளும் வளர்ப்பு மிருகங்களுக்கு ஒரு பெயர் உண்டு. அது தெரியுமா?

1731. உணவைத் தாடைக்குள் — அடக்கிக் கொள்ளும் பழக்கமுடைய பிராணிகள் இப்படி எவ்வளவு உணவுப் பொருளைத் தம் வாய்க்குள் சேமித்து வைத்துக் கொள்ளும்?

தெரியுமே !




1714. பன்னிரண்டே வயது. 1715. பதினெட்டு வகைகள். 1716. பழுப்பு மஞ்சளாக இருக்கும். 1717. மூன்று வயதில். 1718. பதினைந்தாம் நூற்றாண்டு. 1719. கி. மு. 236ல். 1720. கண்டி. 1721. யானைகளைக் கொண்ட ஊர்வலம். 1722. மன்னர் முதலாம் சார்லஸ். மருத்துவர் வில்லியம் ஹார்வி. 1723. ரோகர் பானிஸ்டர் என்பவர் ஆக்ஸ்ஃபோர்டில் இந்த அதிசயம் நிகழ்ந்தது. 1724. புகழ்பெற்ற சர்க்கஸ்காரரான பி. டி. பார்னம் என்பவர் ஏராளமான பொருள் கொடுத்து ஒரு வெள்ளை யானையை வாங்கினார். ஆனால் இது மக்களைக் கவரவில்லை. இதைப் பாதுகாக்க ஏராளமான பொருள் செலவாயிற்று. இதை விற்கவும் முடியாமல் வளர்க்கவும் முடியாமல் அவதிப்பட்டார். பயனற்ற இதனால் அவர் பட்ட தொல்லையே பின்னால் இப்படி ஒரு வார்த்தையை உருவாக்கி விட்டது. 1725. ஐம்பத்தைந்து வயது. 1726. 1726. கில்லி கல்லம் (Gilli callum) என்று பெயர். வாளைச் சுழற்றிக் கொண்டு ஆடுவார்கள். 1727. போலந்து. 1728. ட்ரஃபால்கர் சதுக்கத்தில். 1729. இலைகள், புல். 1730. ஹாம்ஸ்டர் (Hamster) 1731. அதன் நிறையில் பாதி அளவுள்ள உணவுப் பொருள்களைத் தாடைக்குள் அடக்கிக்கொள்ளும்.



'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : கே. ஆர். ஆத்மநாதன்






ராசுவும் வாசுவும் கடத்தப்பட்ட கதை !
"அடடா, கொள்ளை போகுதே ஐயோ நம் நகைக் கடை தடுபா இந்தக் கேடிகளை."
"பொடியன்கள்...பிடி, பிடி போகவிடக் கூடாது போலீசுக்கு அறிவிக்க."
காருக்குள்ளே அடைபட்டுக் கடத்தப்பட்டனர் வெகுதூரம்.
குட்டி வீரர்களை இழுத்துப்போய் குடிசைக்குள்ளே பூட்டிவிட்டார்.
"நொந்திடவேண்டாம், இரு ராசு. வந்துவிடும் பார் போலீசு."
"சுவையான வழியினிலே சுவடு காட்டிவிட்டேன், சுகமாகச் சுவைப்போம்."
"பாதுகாத்தது பழரச பாப்பின்ஸ், பாதைநெடுக வாரியிறைத்தேன்."